1984 மார்ச் 22]

திரு.எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே 1983-84-ஆம் ஆண்டிற்கான நேரடியாக திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த வாரியம் எப்போது உறுவாக்கப்பட்டுள்ளது. அதற்கு எவ்வளவு நிதியை அரசு ஒதுக்கியிறுக்கிறது? என்னென்ன திட்டங்களை எதிர்காலத்தில் பெண்களுக்காக தயாரித்துள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 12--12--1983 முதல செயல்பட்டு வருகின்றது. இதற்ாக மாநில அரசு ரூ. 1 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. என்னென்ன திட்டங்கள் என்ற விவரம் இப்போதுதான் மகளிர் மேம்பாட்டுக் கழகம் உறுவாக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் தான் அதை ஆராய்ந்து என்னென்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் என்று அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 390,391,392 ஆகியவை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (1) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தகவல் கோரல்.

அ) பி. அண்ட். சி. மில். தொழிலாளர்க்ள் வேலை நிறுத்தம்.

திரு சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே பி. அண்ட். சி. மில் தொழிலாளர்கள் 68 நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பி. அண்ட். சி. தொழிலாளர்களைப் பற்றி இங்கே என்ன செய்யச் சொல்கிறீர்கள் கன்சிலியேஷனுக்குப் போக வேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும். ஏதாவது முக்கியமான அம்சம் இருந்தால் சொல்லுங்கள்,